கடிதம் வென்றவர்
உண்மை முடிவு பாரபட்சமின்மை
தேசிய நாளிதழ்
தலைவர் மற்றும் தலைமை ஆசிரியர்: அனில் குமார்
தெலுங்கானா,ஆந்திரா,கர்நாடகா,தமிழ்நாடு
CIRCULATED FROM TS, KA, AP & TN

| Monday 08 September 2025 | தொகுதி – 06 | பிரச்சினை – 19 | விலை – 6.00/– | vijethatelugudaily@gmail.com | www.Vijethadaily.com |
|---|---|---|---|---|---|




# ஓணம் கோலத்தில்.. ஆபரேஷன் சிந்தூர் என எழுதி RSS கொடியை வரைந்த பாஜகவினர்! சலசலப்பு

திருவனந்தபுரம்: கேரள மாநிலம் முழுவதும் நேற்று முன்தினம் ஓணம் பண்டிகை சிறப்பாக கொண்டாடப்பட்டது. ஆனால், ஓணம் கோலத்தில் ஆர்எஸ்எஸ் கொடி வரையப்பட்டு அத்துடன் ஆபரேஷன் சிந்தூர் என எழுதப்பட்டிருந்த சம்பவம் சலசலப்பை ஏற்படுத்தியிருக்கிறது.கேரள மாநிலத்தில் ஓணம் பண்டிகையையொட்டி, கோயில் ஒன்றில் 'ஆபரேஷன் சிந்தூர்' பெருமையை பறைசாற்றும் வகையில் பூக்கோலம் அமைக்கப்பட்ட விவகாரம் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. இந்தக் கோலத்தை அமைத்ததாக ஆர்எஸ்எஸ்-ஐ சேர்ந்த **25** பேர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.கோயில் நிர்வாகத்தினர், இந்த பூக்கோலம் நீதிமன்ற உத்தரவை மீறியதாகக் குற்றம்சாட்டினர். ஆனால், பாஜகவோ, மே மாதம் நடைபெற்ற ராணுவ நடவடிக்கையைப் போற்றும் வகையில் இது அமைக்கப்பட்டதாகக் கூறியது.

என்ன நடந்தது?

கொல்லம் மாவட்டத்தில் உள்ள முத்துப்பிலக்காடு பார்த்தசாரதி கோயிலில் இந்தச் சம்பவம் நடந்தது. கோயில் வாசலில் போட்டப்பட்ட இந்தக் கோலத்தில் ஆர்எஸ்எஸ் கொடியின் சின்னமும், 'ஆபரேஷன் சிந்தூர்' என்ற வாசகமும் இடம்பெற்றிருந்ததாக கோயில் கமிட்டி தெரிவித்துள்ளது. இது உள்நோக்கத்துடன் செய்யப்பட்ட சதி என கோயில் கமிட்டி உறுப்பினர் ஒருவர் குற்றம்சாட்டியுள்ளார்.

நீதிமன்ற உத்தரவு

ஆபரேஷன் சிந்தூர் என எழுதுவதற்கு யாருக்கும் எந்த தடையும் கிடையாது. ஆனால் ஆர்எஸ்எஸ்-க்கும் ஆபரேஷன் சிந்தூருக்கும் என்ன தொடர்பு? என்பதே தற்போதைய கேள்வியாக இருக்கிறது. மட்டுமல்லாது கோயில் வாசல்களில் இடப்படும் கோலங்களில் கொடிகள் சின்னம் இடம்பெறக்கூடாது என ஏற்கெனவே கேரள உயர்நீதிமன்றம் உத்தரவிட்டிருக்கிறது. அப்படி இருக்கையில் ஓணம் கோலம் சம்பவத்தில் நீதிமன்ற உத்தரவு மீறப்பட்டிருப்பதாக புகார்கள் எழுந்திருக்கின்றன.

உள்நோக்கம் கொண்ட கோலம்

அதாவது, "மோதல்களைத் தவிர்க்கும் பொருட்டு, கோயில் வளாகத்திற்குள் கொடிகள் போன்ற அலங்காரப் பொருட்களை வைக்க **2023**-ஆம் ஆண்டு உயர்நீதிமன்றம் தடை விதித்தது. இந்தத் தடையையும் மீறி, ஆர்.எஸ்.எஸ். தொண்டர்கள் தங்கள் கொடி சின்னத்துடன் 'ஆபரேஷன் சிந்தூர்' வாசகத்தை மலர்களால் எழுதியுள்ளனர். இது உயர்நீதிமன்ற உத்தரவை மீறியதோடு, கலவரத்தைத் தூண்டும் விதமாக இருந்ததால் புகார் அளித்தோம். ஆபரேஷன் சிந்தூர் மீது எங்களுக்கு முழு மரியாதை உண்டு. ஆனால், இந்த கோலம் உள்நோக்கத்தோடு இருக்கிறது" என்று கோயில் கமிட்டி அலுவலர் அசோகன் கூறியிருக்கிறார்.

பாஜக அதிருப்தி

இந்த புகாரின் அடிப்படையில் கேரள காவல்துறை ஆர்எஸ்எஸ் அமைப்பை சேர்ந்த **27** பேர் மீது வழக்குப் பதிவு செய்தது. ஆனால் இந்த வழக்குப்பதிவு அதிர்ச்சியளிப்பதாக பாஜக கூறியிருக்கிறது. பாஜக மாநிலத் தலைவர் ராஜீவ் சந்திரசேகர், கேரளாவில் பாகிஸ்தான் ஆட்சி நடக்கிறதா என்று 'எக்ஸ்' சமூக ஊடகத்தில் கேள்வி எழுப்பினார். எஃப்.ஐ.ஆர். உடனடியாக திரும்பப் பெறப்படாவிட்டால், பாஜக நீதிமன்றத்தை நாடும் என்றும் கூறியுள்ளார்."இது கேரளா. இது இந்தியாவின் பெருமைமிக்க ஒரு பகுதி. இருப்பினும், 'ஆபரேஷன் சிந்தூர்' என்ற வார்த்தைகளுடன் பூக்கோலம் அமைத்ததற்காக எஃப்.ஐ.ஆர். பதிவு செய்யப்பட்டுள்ளது. இது முற்றிலும் ஏற்றுக்கொள்ள முடியாதது!" என்று சந்திரசேகர் 'எக்ஸ்' தளத்தில் பதிவிட்டுள்ளார்.

# சுசீலா லீக்ஸ்.. ராமதாஸால் அதிருப்தியில் 'பெல்' தலைவர்!



கடிதம் வென்றவர், | சென்னை:

சென்னை: பரபரப்பாக இருந்த பாமக உட்கட்சி விவகாரங்கள் சற்றே ஓய்ந்திருக்கிறது. ராமதாஸின் இரண்டாவது மனைவி சுசீலா குறித்த தகவலால் ராமதாஸ் பக்கம் இருந்த நிர்வாகிகள் ஒதுங்கிக் கொண்டதாகச் சொல்லப்படுகிறது. இந்த நிலையில் ஜிகே மணி உள்ளிட்ட சிலர் அன்புமணி தரப்புடன் சமாதானம் பேச முயன்றதாகவும், ஆனால் அதற்கு அவர் சம்மதிக்கவில்லை என தகவல் வெளியாகி இருக்கிறது.பாட்டாளி மக்கள் கட்சியில் தந்தை மகன் இடையேயான மோதல் உச்சத்தில் இருந்தது. கட்சியின் தலைவரான அன்புமணியை நீக்கிவிட்டு அவரைச் செயல் தலைவராக நியமிப்பதாக ராமதாஸ் அறிவித்ததில் இருந்தே இருவருக்கும் இடையே மோதல் வெடித்தது.தொடர்ந்து அன்புமணி ஆதரவு நிர்வாகிகளும் ராமதாஸால் தூக்கி அடிக்கப்பட்டனர். அதே நேரத்தில் கட்சியின் தலைவர் நான் தான் என அன்புமணி உறுதியாக நின்றார். ராமதாஸ் கடுமையாகப் பேசியும் அன்புமணி எதுவுமே பேசவில்லை.

# பஸ்சில் தங்க சங்கிலி திருடிய திமுக ஊராட்சி மன்ற தலைவர்..



கடிதம் வென்றவர், | சென்னை:

சென்னை: சென்னையில் ஓடும் பஸ்சில் கூட்ட நெரிசலை பயன்படுத்தி பெண்ணிடம் இருந்து **4** சவரன் தங்க சங்கிலியை திருப்பத்தூர் மாவட்டம் நரியம்பட்டு ஊராட்சி மன்ற தலைவி பாரதி திருடினார். திமுகவை சேர்ந்த இவரை சென்னை கோயம்பேடு போலீசார் கைது செய்துள்ளனர். இந்நிலையில் தான் பஸ்களில் பிக்பாக்கெட் அடிப்பது முதல் மாநில கருவூலத்தை சூறையாடுவது வரை திமுக அதன் அனைத்து உறுப்பினர்களுக்கும் கொள்ளையடிக்க சம வாய்ப்புகளை வழங்குகிறது என்று பாஜக மாநில முன்னாள் தலைவர் அண்ணாமலை கடுமையாக விமர்சனம் செய்துள்ளார்.சென்னை நெற்குன்றம் பகுதியை சேர்ந்தவர் வரலட்சுமி. இவருக்கு வயது **50.** இவர் சமீபத்தில் காஞ்சிபுரத்தில் நடந்த திருமண வரவேற்பு விழாவுக்கு பஸ்சில் சென்றார். வரவேற்பு விழாவை முடித்த பிறகு வரலட்சுமி மீண்டும் பஸ்சில் வீடு திரும்பினார்.

## "அவர்கிட்டயே போய் கேளுங்க"..




சென்னை: சென்னையில் இன்று செய்தியாளர்களைச் சந்தித்த பாஜக மூத்த தலைவர் தமிழிசை சௌந்தரராஜன், செய்தியாளர்களின் கேள்விகளுக்கு, இதற்கு கருத்து சொல்ல நான் தகுதியானவள் இல்லை எனத் தெரிவித்தார். மேலும், நயினார் நாகேந்திரன் பற்றிய கேள்விக்கு, அவரிடமே போய் கேட்டுக் கொள்ளுங்கள் என பதில் அளித்துள்ளார்.பாஜக மூத்த தலைவர் தமிழிசை சௌந்தரராஜன் சென்னையில் செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது, தமிழகத்தில் அண்ணாமலை தேசிய ஜனநாயக கூட்டணியை சிறப்பாக வழிநடத்தினார். ஆனால் நயினார் நாகேந்திரன் சிறப்பான முறையில் வழிநடத்தவில்லை என்று அமமுக பொதுச்செயலாளர் டிடிவி தினகரன் கூறியதாக செய்தியாளர்கள் கேள்வி எழுப்பியதற்கு, நான் இந்த விவகாரத்தில் கருத்து கூறுவதற்கு தகுதியானவள் இல்லை என்று கூறினார தமிழிசை.அதேபோல், அதிமுகவில் எடப்பாடி பழனிசாமி, செங்கோட்டையன் இடையிலான மோதல் விவகாரம் தொடர்பாக செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்கு, இது அவர்கள் உட்கட்சி விவகாரம் இதிலும் கருத்து சொல்வதற்கு நான் தகுதியானவள் இல்லை என்று தெரிவித்தார்.இது தொடர்பான கருத்தை தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் வரவேற்பதாக கூறியது பற்றி செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்கு, "அவரிடமே போய் கேட்டுக் கொள்ளுங்கள்.. ஒன்னும் பிரச்சனை இல்லை" என்று கடுகடுப்போடு தெரிவித்தார்.

அதிமுக பாஜக கூட்டணி மூழ்கும் கப்பல் என்று தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை கூறியது பற்றி செய்தியாளர்கள் கேள்வி எழுப்பியதற்கு, "செல்வப்பெருந்தகை காங்கிரஸ் எனும் மூழ்கும் கப்பலுக்குள் இருந்து கொண்டு எங்கள் கூட்டணியை மூழ்கும் கப்பல் என்று கூறுகிறாரா? முதலில் அவர் தமிழக காங்கிரஸ் தலைவராக இருக்கிறாரா என்பதை விளக்க வேண்டும். **2026** சட்டமன்றத் தேர்தலுக்கு பிறகு செல்வப்பெருந்தகை காங்கிரஸ் கட்சியின் தலைவராக இருப்பாரா என்பதை சந்தேகம்தான்.

# சீட்டுக் கட்டாய் சரியும் அதிமுக..

சென்னை: அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி நேற்று செங்கோட்டையன் விவகாரம் தொடர்பாக திண்டுக்கல்லில் அவசர ஆலோசனை கூட்டத்தைக் கூட்டி இருந்தார். பிற மாவட்டங்களில் இருந்து வேலுமணி, கேபி முனுசாமி, ஓஎஸ் மணியன், சி.விஜயபாஸ்கர் உள்ளிட்டோர் அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட நிலையில், அருகில் இருந்தும் செல்லூர் ராஜூ கலந்துகொள்ளவில்லை.கூட்டம் முடிந்த பிறகுதான்அவர்அங்கு வந்தார்.மேலும் எடப்பாடி பழனிசாமிக்கு நெருக்கமானவர்களாகச் சொல்லப்படும் தங்கமணி, சிவி சண்முகம், ஜெயக்குமார் உள்ளிட்டோர் இந்த ஆலோசனை கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. செங்கோட்டையன் பேசியதற்குப்பிறகுபல அதிமுக சீனியர்கள் அமைதி காப்பதும் தொண்டர்களைக் குழப்பம் அடையச் செய்துள்ளது.அமைதிய இருந்த அதிமுகவில் புயல் வீசத் தொடங்கி இருக்கிறது. அதிமுக ஒன்றிணைய வேண்டும் என்ற குரல் பல ஆண்டுகளாகவே ஒலித்து வரும் நிலையில் தற்போது அதுதீவிரமாகக்கேட்கத் தொடங்கியிருக்கிறது.

சசிகலாஆதரவு

**2021** தேர்தலுக்காக எடப்பாடி பழனிசாமி பிரச்சாரத்தை தமிழ்நாடு முழுவதும் மேற்கொண்டு வரும் நிலையில் சில சீனியர்கள் கடும் அதிருப்தியில் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. குறிப்பாக தங்கமணி, செல்லூர் ராஜூ, செங்கோட்டையன் ஆகியோர் எடப்பாடி பழனிசாமி மீது கடும் அதிருப்தியில் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இந்தநிலையில்கடந்த சில தினங்களுக்கு முன்பு அதிமுக ஒன்று சேர வேண்டும் எனக் கடிதம் எழுதினார் முன்னாள் பொதுச் செயலாளராக அறிவிக்கப்பட்ட சசிகலா.



எடப்பாடி ஆலோசனை கூட்டம்

இதில் கட்சியின் மூத்த நிர்வாகிகள், முன்னாள் அமைச்சர்கள் கலந்துகொண்டனர். குறிப்பாக திண்டுக்கல் சீனிவாசன், நத்தம் விஸ்வநாதன், சி. விஜயபாஸ்கர், கே.பி. முனுசாமி, ஓ.எஸ். மணியன், ஆர்.பி. உதயகுமார், வேலுமணி உள்ளிட்ட பலர் பங்கேற்றனர். கவனிக்கத்தக்க வகையில் மிக அருகில் இருந்த மாவட்டமான மதுரையிலிருந்து செல்லூர் ராஜூ மிக தாமதமாகவே கூட்டத்துக்கு வந்தார். ஆனால் அதற்குள் எடப்பாடி பழனிசாமி கிளம்பிவிட்டார். செங்கோட்டையன் விவகாரம் வெளியான உடனேயே இரவிலிருந்து திண்டுக்கல்லில் முன்னாள் அமைச்சர்கள் குவிந்தனர்.

செல்லூர் ராஜூ

ஆனால் செல்லூர் ராஜூ மிக தாமதமாக வந்தது கவனிக்கத்தக்கது. மேலும் எடப்பாடி பழனிசாமி மீது அதிருப்தியில் இருப்பதாகச் சொல்லப்படும் தங்கமணியும், இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை. கடந்த காலங்களில் எடப்பாடி பழனிசாமிக்கு மிகத் தீவிரமாக ஆதரவு தெரிவித்து வந்த முன்னாள் அமைச்சரும், தற்போது மாநிலங்களவை உறுப்பினராக இருக்கும் சி.வி. சண்முகம், முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் ஆகியோரும் எடப்பாடி பழனிசாமியின் ஆலோசனை கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# சுசீலா லீக்ஸ்.. ராமதாஸால் அதிருப்தியில் 'பெல்' தலைவர்!

## தூது போனவரை திருப்பி அனுப்பிய அன்புமணி



பாமக அரசியல்

மேலும் பொதுக்குழு மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டதால் தானே தலைவராகத் தொடர்வதாகவும் அடுத்த ஆண்டு வரை கூட்டணி உள்ளிட்ட விவகாரங்கள் குறித்து நான் தான் முடிவெடுப்பேன் என பொதுக்குழு மூலம் தீர்மானம் நிறைவேற்றி இருக்கிறார் அன்புமணி. மேலும் இந்தத் தீர்மானம் தேர்தல் ஆணையத்துக்கும் அனுப்பப்பட்டுள்ளது. இது ஒருபுறம் இருக்க ராமதாஸ் போட்டிப் பொதுக்குழு நடத்தினார். அதில் அன்புமணி மீது குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்ட நிலையில் கட்சியின் ஒழுங்கு நடவடிக்கை குழு மூலம் விசாரணை நடத்தியது ராமதாஸ் தரப்பு. மேலும், அன்புமணிக்கு இந்தப் புகார் தொடர்பாக விளக்கம் அளிக்க வேண்டும் என கெடு விதித்திருக்கிறது.

பாமக உட்கட்சி மோதல்

சுசீலாவின் பின்னணி குறித்தும் அடுத்தடுத்து பல தகவல்கள் வெளியான நிலையில், ராமதாஸுக்கான ஆதரவு வட்டம் குறையத் தொடங்கியது. இந்த நிலையில், ஜிகே மணி உள்ளிட்ட ராமதாஸ் தரப்பு நிர்வாகிகள் பொதுவெளிகளில் தோன்றுவதைத் தவிர்த்து வந்தனர். பலரும் ராமதாஸின் இரண்டாவது திருமணம் குறித்துப் பேசுவார்கள் என்பதால் செய்தியாளர் சந்திப்பையும் தவிர்த்தனர். இந்த நிலையில், ராமதாஸ் தரப்பில் இருக்கும் ஒரு சில நிர்வாகிகள் அன்புமணி தரப்பிடம் சமாதானம் பேசி அவர் தரப்புக்குத் தாவ முயற்சித்ததாகச் சொல்லப்படுகிறது.

ஜிகே மணி

குறிப்பாக, கட்சியின் கௌரவ தலைவரான ஜிகே மணி அன்புமணி தரப்பு தொடர்பு கொண்டு பேசியதாகவும், ஆனால் அன்புமணி அதற்கு ஒப்புக்கொள்ளவில்லை எனவும் சொல்லப்படுகிறது. மேலும், தேர்தல் ஆணையத்தின் ஒப்புதலுக்காகக் காத்திருக்கும் நிலையில் அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்கிறது அன்புமணி தரப்பு. மேலும், கட்சியின் தலைவராக தன்னை தேர்தல் ஆணையம் அங்கீகரித்த பிறகு ராமதாஸ் தரப்பில் இருக்கும் நிர்வாகிகளை நீக்கவும், அவரால் நியமிக்கப்பட்ட மாவட்ட தலைவர்கள், செயலாளர்களைக் கட்சியில் இருந்து நீக்க அன்புமணி திட்டமிட்டு இருப்பதாகக் கூறப்படுகிறது.

கட்சி சிக்கல்

இதற்கிடையே ராமதாஸ், அன்புமணி இடையே சமாதானம் ஏற்படுத்தும் முயற்சியில் சில நிர்வாகிகள் ஈடுபட்ட நிலையில், அதற்கும் அன்புமணி தரப்பு ஒப்புக்கொள்ளவில்லை எனச் சொல்லப்படுகிறது. எதுவாக இருந்தாலும் தேர்தல் ஆணையத்தின் முடிவு வந்த பிறகு பேசிக்கொள்ளலாம் எனக் கூறி இருக்கும் அன்புமணி, தனது 100 நாள் நடை பயணத்தைத் தொடர முடிவு செய்து இருக்கிறார். அடுத்தகட்ட நடைபயணம் குறித்த தகவல்கள் அடுத்தடுத்து வெளியாகும் எனச் சொல்லப்படுகிறது.

# பஸ்சில் தங்க சங்கிலி திருடிய திமுக ஊராட்சி மன்ற தலைவர்..



கடிதம் வென்றவர், | சென்னை:

வீடு திரும்பியபோது வரலட்சுமி தனது தங்க நகைகளை சரிபார்த்தார். அப்பாது 4 சவரன் எடை கொண்ட தங்க சங்கிலி மிஸ்ஸாகி இருந்தது. இதுதொடர்பாக அவர் கோயம்பேடு போலீசில் புகார் செய்தார்.கோயம்பேடு போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணையை தொடங்கினர். அப்போது அவர் பயணித்த பஸ்சில் உள்ள கண்காணிப்பு கேமராவை ஆய்வு செய்தனர். அப்போது பெண் ஒருவர் அவரது தங்க சங்கிலியை திருடியது தெரியவந்தது. அதனை வைத்து போலீசார் விசாரணை மேற்கொண்டு பெண் ஒருவரை கைது செய்தனர்.

அந்த பெண்ணின் பெயர் பாரதி. வயது 56. இவர் திருப்பத்தூர் மாவட்டம் நரியம்பட்டு ஊராட்சி மன்ற தலைவியாக இருப்பது தெரியவந்தது. அதோடு அவர் திமுகவில் செயல்பட்டு வருவதும் தெரியவந்தது. ஊராட்சி மன்ற தலைவியாக இருந்து கொண்டு அவர் பஸ்சில் பெண்ணிடம் கைவரிசை காட்டியது அனைவரையும் திடுக்கிட வைத்தது.இந்நிலையில் தான் பெண்ணிடம் தங்க சங்கிலி திருடிய திமுகவை சேர்ந்த ஊராட்சி மன்ற தலைவி பாரதி விவகாரத்தை சுட்டிக்காட்டி பாஜக முன்னாள் மாநில தலைவர் அண்ணாமலையும் விமர்சனம் செய்துள்ளார். இதுதொடர்பாக அண்ணாமலை தனது எக்ஸ் பக்கத்தில் பக்கத்தில் கூறியுள்ளதாவது:

"நீங்கள் திமுகவின் உறுப்பினராக இருந்தால் கொள்ளையடிப்பதற்கான உரிமத்துடன் அதற்கான பாராட்டையும் பெறுவீர்கள். இந்த போட்டோவில் வட்டமிட்டு காட்டப்பட்டு இருக்கும் நபர் திருப்பத்தூர் மாவட்ட திமுக ஊராட்சி தலைவர். பஸ்சில் 4 சவரன் தங்க சங்கிலியை திருடி உள்ளார். பஸ்களில் பிக்பாக்கெட் அடிப்பது முதல் மாநில கருவூலத்தை சூறையாடுவது வரை திமுக அதன் அனைத்து உறுப்பினர்களுக்கும் கொள்ளையடிக்க சம வாய்ப்புகளை வழங்குகிறது'' என விமர்சனம் செய்துள்ளார்.

# 3 மாதத்தில் 4 மாநாடு.. கோவை, மதுரையில் பாஜக போடும் மெகா திட்டம்..

## டெல்லி மேலிடம் கொடுத்த அசைன்மெண்ட்





சென்னை: தமிழ்நாட்டில் சட்டசபைத் தேர்தல் நெருங்கிவிட்ட நிலையில், டிசம்பர் மாதத்திற்குள் 4 முக்கிய மாவட்டங்களில் பிரம்மாண்ட மாநாடுகளை நடத்த பாஜக திட்டமிட்டுள்ளது. இந்த மாநாட்டில் பிரதமர் நரேந்திர மோடி, மத்திய அமைச்சர் அமித்ஷா மற்றும் ஜேபி நட்டா உள்ளிட்டோரை பங்கேற்க வைக்கவும் திட்டமிட்டு வருகின்றனர்.தமிழ்நாட்டில் சட்டசபைத் தேர்தலுக்கு இன்னும் 7 மாதங்கள் மட்டுமே இருக்கிறது. ஏற்கனவே சட்டசபைத் தேர்தலுக்காக அதிமுக - பாஜக கூட்டணி அமைக்கப்பட்டுள்ளது. ஏப்ரல் மாதமே சென்னை வந்த மத்திய அமைச்சர் அமித்ஷா, அதிமுக - பாஜக கூட்டணியை அறிவித்தார். அதற்கு முன்னதாக தமிழக பாஜக தலைவராக நயினார் நாகேந்திரன் கொண்டு வரப்பட்டார்.அதிமுக - பாஜக கூட்டணி இரு கட்சிகளின் தொண்டர்கள் மத்தியிலும் பெரிய உற்சாகத்தை கொடுக்கவில்லை. ஆனால் அதிமுகவின் உதவி இல்லாமல் சட்டமன்றத்திற்குள் செல்ல முடியாது என்று உணர்ந்து கொண்ட பாஜக நிர்வாகிகள், எடப்பாடி பழனிசாமியின் சுற்றுப்பயணத்தின் போதே செயல்பட தொடங்கிவிட்டனர். இதன் காரணமாக எடப்பாடி பழனிசாமியின் சுற்றுப்பயணத்தில் அதிகளவில் பாஜக கொடிகள் தென்பட்டன.அதேபோல் 2 வாரங்களுக்கு முன்பாக நெல்லையில் பாஜகவின் பூத் கமிட்டி மாநாடு நடத்தப்பட்டது. இதேபோல் அடுத்தடுத்து மண்டல அளவில் பூத் கமிட்டி மாநாட்டை நடத்த பாஜக தீவிரமாக உள்ளது. இந்த நிலையில் டிசம்பர் மாதத்திற்குள் பாஜக சார்பாக 4 மாவட்டங்களில் 4 பிரம்மாண்ட மாநாடுகளை நடத்த ஆயத்தமாகி வருகிறது.

அந்த வகையில் கோவை, மதுரை, சென்னை மற்றும் தஞ்சாவூர் ஆகிய 4 மாவட்டங்களில் பாஜகவின் இந்த மாநாடு நடத்தப்பட உள்ளது. கோவையில் பாஜகவுக்கு பெரியளவில் ஆதரவு இருக்கும் சூழலில், மதுரையிலும் முருகன் மாநாடு மூலமாக ஒரு வளர்ச்சியை கண்டுள்ளது. அதேபோல் சென்னை மற்றும் தஞ்சாவூரில் பாஜக சில தொகுதிகளில் போட்டியிட முடிவு செய்திருக்கிறது.இதனால் அங்கும் மாநாடு நடத்தப்பட வேண்டும் என்பதில் அக்கட்சி நிர்வாகிகள் தீவிரமாக இருக்கின்றனர். இந்த மாநாடு பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்கும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்படவுள்ளது. அதேபோல் மத்திய அமைச்சர் அமித்ஷா, ஜேபி நட்டா உள்ளிட்டோரும் பங்கேற்க உள்ளதாக தெரிய வந்துள்ளது. இதனை டிசம்பர் மாதத்திற்குள் நடத்தி முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

அக்டோபரில் தொடங்கி 3 மாதங்களில் 4 மாநாடுகளை பாஜக நடத்த உள்ளது. அதற்குள் கூட்டணி கட்சிகள் உடனான பேச்சுவார்த்தையை முடித்து, கூட்டணியை இறுதி செய்வதிலும் பாஜக மேலிடம் தீவிரமாக உள்ளது. இந்தக் கூட்டணியில் பாமக, தமாகா, புதிய நீதிக் கட்சி, புதிய தமிழகம் உள்ளிட்டோர் இணையலாம் என்று பார்க்கப்படுகிறது.

# விண்ணப்பித்த பெண்களுக்கு கண்டிப்பாக மகளிர் உரிமைத்தொகை கிடைக்கும்



காஞ்சிபுரம் மாவட்ட திமுக நிர்வாகி இல்ல திருமண விழாவில் துணை முதலமைச்சரும், திமுக இளைஞரணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் இன்று பங்கேற்றார். அப்போது மணமக்களை வாழ்த்திப் பேசிய உதயநிதி ஸ்டாலின், மகளிர் உரிமைத்தொகை திட்டம் தொடர்பாகவும் பேசி இருக்கிறார்.மகளிர் உரிமைத்தொகை அனைவருக்கும் இந்த விழாவில் உரையாற்றிய துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், "ஒரு கோடியே 20 லட்சம் மகளிருக்கு உரிமைத்தொகை வழங்கப்படுகிறது. இந்த எண்ணிக்கை மேலும் உயரும். உங்களுடன் ஸ்டாலின் முகாம்களில் விண்ணப்பித்த மகளிர் அனைவருக்கும் கண்டிப்பாக மகளிர் உரிமைத்தொகை வழங்கப்படும்." எனத் தெரிவித்துள்ளார்.

மேலும் பேசிய உதயநிதி ஸ்டாலின், "முதல்வர் ஸ்டாலினின் சாதனைகளை மக்களிடம் எடுத்துக் கூறினால் 200 அல்ல, 200 பிளஸ் தொகுதிகளில் வெற்றிதான். மற்ற மாநிலங்களை விட, அனைத்து துறைகளிலும் தமிழ்நாடு வளர்ச்சி அடைந்துள்ளது. பெயருக்குப் பின்னால் சாதிப் பெயரைப் போடாமல், படித்த பட்டத்தை போடுவது தான் பெருமை.

அதிமுகவை பாஜக கூறு போட்டுவிட்டது. அதிமுக தொண்டர்கள் சசிகலா அணியா? சசிகலா டிரைவர் அணியா? செங்கோட்டையன் அணியா? எந்த அணி என தங்களுக்குள் பேசிக்கொண்டிருக்கின்றனர். திமுக தொண்டர்கள் கொள்கை பற்றியும் திட்டங்கள் பற்றியும் பேசிக் கொள்வார்கள்" எனப் பேசியுள்ளார்.

மகளிர் உரிமைத்தொகை

கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டம் தமிழ்நாட்டில் திமுக அரசால் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த திட்டத்தின் மூலம் மாதந்தோறும் 1.15 கோடி பெண்கள் ரூ.1000 பெற்று வருகின்றனர். இந்த தொகை பெண்களின் வங்கிக் கணக்கில் நேரடியாக வரவு வைக்கப்பட்டு வருகிறது.இந்தியாவில் பல்வேறு மாநிலங்கள் இந்த திட்டத்தை அடுத்தடுத்து செயல்படுத்த தொடங்கினாலும், தமிழ்நாடு மகளிர் உரிமைத் தொகை திட்டத்தை திறம்பட செயல்படுத்துவதில் முன்னோடியாக திகழ்கிறது. இப்போது இந்த திட்டம் மேலும் விரிவாக்கம் செய்யப்பட உள்ளது. அதற்காக பொதுமக்களிடம் இருந்து தமிழக அரசு புதிய விண்ணப்பங்களை பெற்றுள்ளது.

பெரும் எதிர்பார்ப்பு

45 நாட்களுக்குள் உங்களுடன் ஸ்டாலின் முகாமில் கொடுக்கப்பட்ட மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என அரசு தெரிவித்திருப்பதால், தங்களின் மனு ஏற்றுக்கொள்ளப்பட்டதா, இல்லையா என்பதை தெரிய பொதுமக்கள் ஆர்வமாக காத்திருக்கின்றனர்.

வரும் செப்டம்பர் 15 ஆம் தேதி கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டம் தொடங்கப்பட்டு இரண்டு ஆண்டுகள் நிறைவு செய்து 3வது ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது. இந்த திட்டம் தொடங்கப்பட்ட நாள் என்பதால் பெண்களை மகிழ்விக்கும் குட் நியூஸ் இந்த தேதியில் வெளியாகுமா என்ற எதிர்பார்ப்பு பெண்கள் மத்தியில் உள்ளது.

திண்டுக்கல்: மதுரை விமான நிலையத்திற்கு பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் பெயரை சூட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வாக்குறுதி அளித்துள்ளார். அதுமட்டுமல்லாமல் முத்துராமலிங்கத் தேவருக்கு பாரத ரத்னா விருது வழங்க மத்திய அரசிடம் கோரிக்கை வைப்போம் என்றும் கூறியுள்ளார்.



## மதுரை விமான நிலையத்திற்கு முத்துராமலிங்கத் தேவர் பெயர்சூட்ட நடவடிக்கை.

நியூயார்க்: கடந்த 1977-ம் ஆண்டின் சர்வதேச அவசர நிலை பொருளாதார அதிகார சட்டப்படி, அமெரிக்க அதிபர் டிரம்ப், இந்தியா, ரஷ்யா, சீனா, கனடா உள்ளிட்ட பல்வேறு உலக நாடுகளுக்கு சரமாரியாக வரி விதித்தார். இந்நிலையில் இந்த வரிவிதிப்பை எதிர்த்து நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. இதனை விசாரித்த நீதிமன்றம், அமெரிக்க வரிவிதிப்பு சட்டவிரோதம் என்ற தீர்ப்பளித்துள்ளது. இந்த உத்தரவை எதிர்த்து அமெரிக்காவின் உச்ச நீதிமன்றத்தில் டொனால்ட் டிரம்ப் அரசு மேல்முறையீடு செய்துள்ளது. விரைவில் விசாரிக்க வலியுறுத்தியுள்ளது.உக்ரைனில் போரை முடிவுக்கு கொண்டுவர விரும்பிய அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப், ரஷ்யாவிடம் யாரும் கச்சா எண்ணெய் வாங்க வேண்டாம் என்று எச்சரித்தார். எனினும், இந்தியா, சீனா உள்பட பல்வேறு நாடுகள் ரஷ்யாவிடம் ஆயில் வாங்கி வருகின்றன. இந்த பணம் தான் உக்ரைனில் போரை முடிவுக்கு கொண்டுவர முடியாததற்கு காரணம் என்று கூறிய டிரம்ப், வரி விதிக்கப் போவதாக அறிவித்தார். அதன்படியே வரிகளை விதித்தார். இந்தியாவிற்கு 50 சதவீதம் என்கிற அளவிற்கு வரி விதித்துள்ளார். இதேபோல் சீனா, ரஷ்யா உள்பட பல்வேறு நாடுகளுக்கு வரி விதித்துள்ளார்.

அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி மக்களை காப்போம், தமிழகத்தை மீட்போம் என்ற பெயரில் பிரச்சாரம் மேற்கொண்டு வருகிறார். அந்த வகையில் திண்டுக்கல் மாவட்டத்தில் எடப்பாடி பழனிசாமி பிரச்சாரத்தில் பேசுகையில், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவருக்கு நாட்டின் உயரிய விருதான பாரத ரத்னா விருது அளிக்க வேண்டும் என்று மத்திய அரசுக்கு கோரிக்கை வைக்கப்படும்.அதனை பெறுவதற்கான அத்தனை முயற்சிகளையும் அதிமுக எடுக்கும். அதேபோல் மதுரை விமான நிலையத்திற்கு பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரின் பெயரை வைக்க அதிமுக அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கும் என்று தெரிவித்துள்ளார். இதே கோரிக்கையை எதிர்க்கட்சித் தலைவராக இருந்த போது மு.க.ஸ்டாலினும் ஒருமுறை வைத்தார்.அதனை பெறுவதற்கான அத்தனை முயற்சிகளையும் அதிமுக எடுக்கும். அதேபோல் மதுரை விமான நிலையத்திற்கு பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரின் பெயரை வைக்க அதிமுக அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கும் என்று தெரிவித்துள்ளார். இதே கோரிக்கையை எதிர்க்கட்சித் தலைவராக இருந்த போது மு.க.ஸ்டாலினும் ஒருமுறை வைத்தார்.தற்போது எடப்பாடி பழனிசாமியும் வைத்திருக்கிறார். 2021ஆம் ஆண்டு சட்டசபைத் தேர்தலுக்கு சில மாதங்களுக்கு முன்பாக முதல்வர் எடப்பாடி பழனிசாமி வன்னியர்களுக்கு 10.5 சதவிகித் இடஒதுக்கீட்டை அறிவித்தார். அது முக்குலத்தோர் சமூக மக்களிடையே எதிர்ப்பை சந்தித்தது. இதனால் அந்த தேர்தலில் தென் மாவட்டங்களில் அதிமுகவுக்கு பெரியளவில் வாக்கு சதவிகிதம் குறைந்தது.

அதன் தாக்கம் நாடாளுமன்றத் தேர்தலின் போதும் இருந்தது என்று சொல்ல வேண்டும். ஏனென்றால் மதுரை, ராமநாதபுரம், கன்னியாகுமரி, நெல்லை, தேனி உள்ளிட்ட மாவட்டங்களில் அதிமுக 2வது இடத்திற்கு தள்ளப்பட்டது. அதேபோல் எடப்பாடி பழனிசாமிக்கும் முக்குலத்தோர் சமூக மக்கள் மத்தியில் பெரிய ஆதரவு மனநிலை இல்லை. தேவர் ஜெயந்தியின் போது அவர் பசும்பொன் வருவதை தவிர்த்து வந்துள்ளார்.

அச்சிடப்பட்டது, வெளியிடப்பட்டது மற்றும் சொந்தமானது DR.B.ANILKUMAR ,@ 407 தர்னாகா , ஹைதராபாத் , தெலுங்கானா மாநிலம். DAIWIK PUBLICATIONS pvt.ltd இல் வெளியிடப்பட்டது. SNEHITHA PRINTERS H.NO: 2-6 , வாரங்கல் மாவட்டம்.தெலுங்கானா மாநிலம் , ஆசிரியர் DR.B.ANILKUMAR ,RNI NO TELTEL/2021/ 81079 , செல்: 7702866885 ,vijethatelugudaily@gmail.com